RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI:10.34256/irjt22462

OPEN ACCESS

# குமரி ஆதவன் படைப்பில் குடும்ப உறவு முறைகள்

**சி.சு. அன்புக்கொடி பகவதி [அ, *], த. மகிலாஜெனி [அ]**

[அ] தமிழாய்வு மையம், இலக்குமிபுரம் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, (மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்துடன் இணைவுப் பெற்றாது), நெய்யூர், கன்னியாகுமரி-629802, தமிழ்நாடு,இந்தியா.

# Family Relationships in the work of Kumari Aadhavan

**C.S. Anbukodi Bhagavathi [a, *], D. Mahila Jeni [a]**

[a] Research Centre of Tamil, Lekshmipuram College of Arts and Science, Neyyoor-629802 (Manonmaniam Sundaranar University, Tirunelveli-627012), Tamilnadu, India

* Corresponding Author: anbukodi@gmail.com

Received: 20-06-2022
Revised: 17-09-2022
Accepted: 29-09-2022
Published: 09-10-2022

Check for updates

**ABSTRACT**

Human relationship is made up of human bonds of love. Human life becomes meaningful only when human beings are in relationship. It is only because people live together that they are able to live happily in family relationships, marriage relationships, love relationships, etc. Today's society, which is changing from joint family, is not even aware of the realities of life. Today's people are unable to get out of social networks and forget about relationships. This article highlights the cracks in such relationships.

**Keywords:** Relationship, Society, People, Marriage

## முன்னுரை

வாழ்க்கையில் ஒருவரையொருவர் வணங்குவது பெரியது அல்ல. ஆனால் ஒருவரை ஒருவர் பாராட்டி புகழ்ந்து கொண்டு வாழ்வதுவே அர்த்தமுள்ள வாழ்வாகும். மனித உறவுகளின் தொடக்கமே அன்பு மனிதர்கள் அன்புறவில் வாழும்போது மனித உறவும் செழித்தோங்குகிறது. மனித உறவின் அடிப்படையே குடும்ப உறவு. போன்ற உறவுமுறை பற்றி இக்கட்டுரையில் ஆராயப்படவுள்ளது.

## உறவு முறை

உறவு என்பது உண்மையின் வெளிப்பாடு இந்த உண்மை அன்பிலிருந்து தோன்றுகிறது. உண்மையான அன்பு இருக்கும் இடத்தில் உறவு தோன்றுகிறது. “தனி மனிதன் ஒருவனின் நற்சிந்தனைகள் என்பவை நல்ல குடும்ப உறவை வேராகக் கொண்டு கிளைத்தெழுகின்றன” (Manavazhan, 2013). “உறவு அன்பின் வெளிப்பாடு பண்பின் செயல்பாடு” என்று மு.சற்குணவதி குறிப்பிட்டுள்ளார் (Sargunavathi, 2013). மனிதர்கள் அன்புடன் இருக்கும் போது தான் ஒவ்வொரு உறவுமுறைகளும் உருவாகி வளர்ச்சி அடைகிறது. ஆண், பெண் ஒருவனுக்கு ஒருத்தி என்ற உறவு முறையில் வாழ வேண்டும். “பரத்தையிடம் இன்பம் நுகர்ந்து திரும்பும் தலைவனைப் பார்த்து இம்மை மாறி மறுமையாகினும் நீ யாகியர் என் கானலனையானாகியர் நின் நெஞ்சு நேர்பவளே என்று சொல்லும் வார்த்தைகளிலிருந்து ஒருத்திக்கு ஒருவன் என்று பெண்ணை மட்டுமே அக்கால சமூகம் வாழப் பழக்கியிருக்கிறது.” என்பதை அறிய முடிகிறது (Rasarasan, 2011).

## குடும்ப உறவு

குடும்பம் என்பது பலபேர் நிறைந்த ஒரு பெரிய கட்டமைப்பாக இருந்தது. ஒருவரால் ஒருவர் என்ற உள்ளாந்த உறவாக காணப்படுகிறது. "அறத்தின் மூலம் பொருளீட்டி இன்பம் துய்ப்பதற்கு ஒரே களம் குடும்பம்" ஆகும் (Kumari Aathavan, 2021). குறிக்கோளில்லாமல் கண்டதைக் கண்டபடி தின்று காட்டில் சுற்றித் திரிந்த மனிதன் புர்pதலுடன்; கூடிய கூட்டு வாழ்க்கையைக் கண்டறிந்த முதல் நிலையும்; அமைப்பும் குடும்பம் தான்." (Jeye Prakash, 2010) "யாரும் யாரோடும் வாழலாம் என்ற நடைமுறையிலிருந்து மாறி நாகரீக முறையில் பண்பாட்டு வாழ்வியல் அடுத்த தலைமுறையை உருவாக்கித் தருகிற உன்னதமான வாழ்வியல் களம் குடும்பம்" ஆகும் என்று குமரி ஆதவன் கூறுகிறார் (Kumari Aathavan, 2021).

## திருமணம் விளக்கம்

திருமணம் என்ற சொல்லில் உள்ள 'மணம்' என்ற சொல்லுக்கு 'கூடுதல்' என்பது பொருள். "மேன்மையான ஒன்றை குறிப்பிட திரு என்ற அடைமொழி கொடுத்து அழைப்பது தமிழர் மரபாகையால் இல்லற வாழ்வின் அடிப்படையாக அமையும் மணம் 'திருமணம்' என்று அழைக்கப்படுகிறது". (Kumari Aathavan, 2021) "திருமணம் என்பது வெறும் விளையாட்டன்று. ஒவ்வொரு பாதியாய் வளர்ந்து வரும் இரண்டு உயிர் அன்றி முழுத்தன்மை எய்திக் கடனாற்றுதற்கு, அவைகளை அன்புக் கயிற்றால் இயற்கை பிணைப்பது திருமணம்" என்று திரு.வி.க கூறுகிறார் (Kaliyana Suntharanar, 2012). "திருமணம் என்பது ஓர் ஆணும் பெண்ணும் எந்தநிலையிலும் சேர்ந்து வாழ்வது என சட்டப்பூர்வமாகச் செய்துக் கொள்ளும் ஒப்பந்தம்" என்று திருநாவுக்கரசு கூறுகிறார்.

## திருமண உறவு

திருமண உறவு என்பது சமூகத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஆண், பெண் உறவு நிலையைக் குறிக்கிறது. ஓர் ஆணும் பெண்ணும் திருமண உறவில் இணைகின்றனர் என்றால் அதனை வாழ்க்கை ஒப்பந்தம் என்று கூறுகின்றனர். "குடும்பம், பாலுறவு, இனப்பெருக்கம் போன்ற பல காரணங்களுக்காக உருவாக்கப்பட்ட ஓர் உறவுமுறை அமைப்புதான் திருமணம் என்று குமரி ஆதவன் கூறுகிறார் (Kumari Aathavan, 2021). திருமண உறவு என்பது "ஒருபொழுது தோன்றி மற்றொரு பொழுது அழிவதன்று அஃது இம்மை மறுமை வரை தொடர்ந்து நிற்பது" 'ஆயிரங்காலத்துப் பயிர்' என்று திருமண உறவை பற்றி நம் முன்னோர்கள் கூறுவதும் உண்டு (Kaliyana Suntharanar, 2012).

## திருமண உறவின் நன்மைகள்

திருமண உறவின் நோக்கம் துன்பத்தைச் சுருக்கி இன்பத்தைப் பெருக்குவதாகும். திருமண உறவில் "இன்ப வாழ்வுக்குத் தடையாக இருப்பவற்றை விலக்கி மகிழ்வை நோக்கி நகர்வது எப்படியென்றும் அறிந்து கொண்டால் திருமண வாழ்வு தித்திக்கும் இன்ப வாழ்வாகும்". என்று குமரி ஆதவன் கூறுகிறார் (Kumari Aathavan, 2021). மனிதனிடம் காணப்படும் சுயநலம் ஒழிந்து போகிறது. திருமணம் என்னும் உறவால் உறவுகள் ஒன்று சேர்கின்றன. திருமணம் வியாபாரமாக இல்லாமல் ஒருவருக்கொருவர் நேசித்து வாழுகிற வாழ்க்கையாக அமையுமானால் திருமண வாழ்வு சொர்க்கம் தான் "தினமும் ஒருமுறை பிரார்த்தனை செய்! போருக்குச் செல்லும் போது இருமுறை பிரார்த்தனை செய்! திருமணத்திற்குச் செல்லும் போது பலமுறை பிரார்த்தனை செய்!" என்று இந்தியப் பழமொழியை ஆதவன் கூறியுள்ளார் (Kumari Aathavan, 2021). திருமண வாழ்வு சரியாக அமைந்து விட்டால் இன்பமாகும். "வாழ்க்கைத் துணை மானிடப் பிணை, அவனுக்கு அஃது இணை பெண்ணினம் ஆணினத்தை மென்மையாக்கிச் செம்மையாக்கும்" (Seluvaimuthu, 2008) இது திருமண வாழ்வை அழகாக்கும்.

## காதல் திருமண உறவு

காதல் என்பது ஓரிடத்தில் படிந்த வேட்கை. "காதல் அன்பென்னும் தன்மையினின்றும் பிறப்பத". "உண்மை காதலி தன் காதலனுடைய உடல் நலனோ பிறவோ குன்றினும் அவள் அவனை விட்டுப் பிரியாது ஒன்றிய அன்பால் தொண்டு செய்வாள். காதலன் உயிர் நீப்பினும் அவனைக் காதலி மறவாள்" என்று திரு.வி.க கூறுகிறார் (Kaliyana Suntharanar, 2012). தன் உழைப்பால் நின்று வாழவும் வைக்கவும் தயாரான பண்பு காதல் உறவில் ஈடுபடவேண்டும் ஏனெனில் இந்நிலை அடைந்த பின்புதான் காதல் முழுமுகம் தெரியும் ஆனால் மாணவப் பருவத்தில் யாரிடமும் சொல்லாமல் உடன்போக்கில் செல்வது அவசரப்புத்தியாகும். காதலைப் பெற்றோரிடம் தெரிவியுங்கள். சம்மதம் கூறும் வரை சமாதானம் கொண்டிருங்கள் அதை விட்டுவிட்டு காதல் என்பது சினிமாவில் வருவது போன்று என்ற தவறான எண்ணம் கொள்வது முட்டாள் தனமாகும். "இளமைப் பருவம் என்பது எதிலும் எளிதில் மயங்கக் கூடியது. உடல்கட்டைப் பார்த்து முக அழகைப் பார்த்து விரும்பினால் நிச்சயம் வாழ்க்கையில் சந்தோஷம் மலராது. அழகு சிதைந்த பின் உன்னோடு வாழ்வது அன்பும் பண்பும் அறிவும் தான்" (Kumari Aathavan, 2021) என்று குமரி ஆதவன் கூறுகிறார்.

## அன்புறவில் மகிழ்ச்சி

"அன்பு அனைத்தையும் வெல்லும் என்பது இலத்தீன் பழமொழியாகும்", (Rasarasan, 2011) "ஆசை பேராசை என்னும் நிலைகளுக்கு இடையில் அளவாகவும் அழகாகவும் அமையும் அன்பின் ஆற்றல் மிகுதி", "புறத் தேவைகளான பொருளின் மேலான விருப்பம் அன்பானது மேலோட்டமான உணர்வுகளை விட உள்ளார்ந்த உணர்வுகளுடன் உறவுடையது அன்பு "தனியாக அழு நான்குபேரோடு சேர்ந்து சிரி என்பார்கள் (Jeye Prakash, 2010). ஒருவர் தனியாக இருந்து சிரித்தால் பார்ப்பவர்கள் சந்தேகப்படுவார்கள் நான்குபேர் சேர்ந்து சிரித்தால் தான் சந்தோஷம்" (Kumari Aathavan, 2021) பிறக்கும் அன்புறவில் ஒன்றுபட்டு வாழ்ந்தால் தான் மகிழ்ச்சி கிடைக்கும்.

## உடையும் உறவுகள்

ஒருவரையொருவர் புர்pந்துகொள்ளாத நிலை வரும்போது உறவில் விரிசல் ஏற்படுகிறது. "உறவுகள் உறுதுணையான காலம் மாறி உறுத்தல்கள் என்ற நினைவும் நிலையும் படிப்படியாக அறிமுகமாக வருகிறது" பிரச்சனைகள் நிறைந்தது தான் வாழ்க்கை திருமண உறவின் மூலம் இருவரது குணமும் வெளிப்படையாக தெரிய வரும் திருமணம் முடிந்த பின்பு சிலரது குணங்கள் ஒத்துப் போவதில்லை (Jeye Prakash, 2010). இதனால் பல பிரச்சனைகள் ஏற்பட்டு குடும்பம் உடையும் நிலையில் வருகிறது. சிலர் விட்டுக் கொடுக்கும் பண்புடையவராக இருக்கின்றார்கள். இவர்களது வாழ்வும் அழகாக காணப்படும்.

## முடிவுரை

உலகமும் மக்களின் நடத்தைகளும் இன்றைக்கு வேகமாக மாறிக் கொண்டிருக்கிறது. பெற்றோர் பார்த்து நடத்தி வைக்கின்ற திருமணங்கள் இனிவரும் காலங்களில் இருக்குமா என்ற கேள்வி ஒருபுறமாக உள்ளது. என்னதான் காலம் மாறினாலும் திருமணம் என்பது ஆண், பெண் இணைந்து குடும்பமாக வாழுதல் என்பது மறையப்போவதில்லை. உடல் அடிடை மட்டுமல்ல வாழ்க்கைத் துணையின் மன அழகையும் பாராட்டுங்கள் காரணம் மன அழகுதான் நிலையானதுஇன்றைய கால காதல் முறையானது அவசரபுத்தியாகவே உள்ளது. எனவே ஆராய்ந்து செயல்பட்டு உடைந்து வரும் உறவுகளை ஒன்றுபடுத்தி; மனித உறவுகளைப் பாதுகாக்க வேண்டும் என்பதை இக்கட்டுரை வலியுறுத்துகிறது.

## References

Jeye Prakash, N. (2010), Nartamil Chinthanikaloom, Nadaimurai Chinthanaikaloom, Ganga Rani Pathipagam, Chennai, India.

Kaliyana Suntharanar, V. (2006), Pennin Perumai, Saratha Pathipagam, Chennai, India.

Kumari Aathavan (2021), Thampathiyarkalin Kanivana Gavanathirku, Vijaya Pathipagam, Coimbatore, India.

M. Thirunavukarasu(2012), Manam Thirumanam, Amrudha Publications, Chennai, India.

Manavazhan, A (2013) Tamil Sevieal Noolkaliel, Aram Ariviyal Samugam, International Institute of Tamil Studies, Chennai, India.

Sargunavathi, M (2013) Tamil Ilakiyankalil Uravugal, International Institute of Tamil Studies, Chennai, India.

Seluvaimuthu (2008), Antum Intum, Arivu Pathipagam, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Authors have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author(s) 2022. The text of this article is open access and licensed under a Creative Commons Attribution 4.0 International License